1982 மார்ச் 24]

கெனவே 25 கி.மீ. தொலைவிற்குள் கரூர் வட்ட தலைமையகத்தில் ஓர் முழுமையான தீயணைப்பு நிலையம் இயங்கி வருவதால், சின்ன தாராபுரத்தின் தேவைகளை கரூர் தீயணைப்பு நிலையத்திலும் பூர்த்தி செய்து கொள்ளலாம். முன்னுரிமைப் பட்டியலிலுள்ள எல்லா ஊர்களிலும் புதியதாக தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட்ட பின்னர் சின்ன தாராபுரத்தில் அவசிய நிலைமைக்கேற்ப எடுத்துக் கொள்ளப்படும்.

ஈட்டி பாலா போன்ற ஆயுதங்சளை வைத்துக் கொள்வதற்கான உரிமம்.

வினா எண் 626—திரு. ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன் : மற்றும்திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) ஈட்டி, பாலா போன்ற ஆயுதங்கள் வைத்துக் கொள்ள லைசென்ஸ் பெற வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ) படைக்கல விதிகள் 1962 இன் அட்டவணை 1 (Schedule—) இன் பகுதி V இல் குறிப்பிடப்பட்டுள்ள படைக் கருவிகள் கல மற்றும் வெடி மருந்துகளின் பட்டியலின்படி 9 அங்குல நீளம் மற்றும் 2 அங்குல அகலத்திற்கு மேற்பட்ட குத்து பாகமுள்ள, வீட்டு, விவசாய, விஞ்ஞான மற்றும் தொழில் உபயோகங்களுக்கானவாறு செய்யப்படாத, ஈட்டி, (நீளக்) கத்தி மற்றும் இதர கூர்முனைக் கருவிகள், ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துகள், உயிருக்கு ஆபத்தானவை என குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கருவிகளை வைத்துக் கொள்ளவும், பயன்படுத்தவும், படைக்கலச் சட்ட விதிகளின்படி உரிமம் பெற வேண்டும்.

திரு. ஆர். நவநீத கிருஷ்ணபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த ஈட்டி, பாலா போன்றவற்றை சாதாரணமாக கிராமங்களிலே எல்லோரும் வைத்திருப்பார்கள். வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சப் போகின்ற போது பாம்பு போன்றவை எதிர்படுகின்றபோது எட்டி நின்று எறிவதற்கு இந்த ஈட்டி பாலா போன்றவை வசதியாக இருக்கும். மேலும் உழவர்கள் உபயோகப் படுத்துகின்ற கலப்பையினுடைய கொளு ஈட்டி மாதிரித்தான் இருக்கும். ஆகவே கொல் பட்டறையிலே அதைத் தயாரித்துக் கொண்டிருக்கும்போது கூட அவர்கள் ஈட்டிதான் தயாரிக்கிறார்கள் என்று கருதப்படுகின்ற நிலைமை ஏற்பட்டு அதனால் அவர்கள் பாதிக்கப்படக்கூடும். ஆகவே அந்த நிலைமையை மாற்றி இந்த ஈட்டி, பாலா போன்ற ஆயுதங்கள் வைத்துக் கொள்வதற்கு லைசன்ஸ் பெற வேண்டும் என்ற அந்த விதி ரத்து செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்போது இதற்கெல்லாம் உரிமம் பெற வேண்டும் என்ற நிலை இருக்கின்ற போதே ஆங்காங்கு வகுப்புக் கலவரங்கள் போன்றவை ஏற்படுகின்றபோது இவற்றைப் பெரும்பாலும் பயன் படுத்திவிடுகிறார்கள். அதனால் சிலபல இடங்களில் தற்காலிக மாக அந்த உரிமங்களை ரத்து செய்து விட்டு அந்த ஆயுதங்களைக் கூட பறித்திருக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. இப்படி இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி போன்ற மாவட் டங்களில் அந்த உரிமைகங்கள் ரத்து செய்யப்பட்டு அவர்களின் கையிலே உள்ள ஆயுதங்கள் தற்காலிகமாக பறித்து வைக்கப் படக்கூடிய சூழ்நிலைகள் எல்லாம் ஏற்பட்டன. ஆகவே இப்படிப் பட்ட நிலைமைகள் எல்லாம் இருக்கும்போது அந்த ஆயுதங்களை வைத்துக் கொள்வதற்கு உரிமம் பெற்றுத் தீரவேண்டும் என்ற அந்த விதியினைத் தளர்த்துவதாக இல்லை.

திரு. ஆர். நவநீத கிருஷ்ணபாண்டியன் : தலைவர் அவர் களே கலவரப் பகுதிகளில் ஈட்டி, பாலா போன்றவற்றை உப யோகப்படுத்துகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார் கள். ஆனால் ஒருவனைக் கொல்ல வேண்டும் என்றால் பெரிய ஈட்டிதான் வேண்டும் என்று இல்லை. சாதாரண பேனாக் கத்தியால் கூட கொன்றுவிட முடியும். மேலும் இந்த ஈட்டி, பாலா போன்றவை சாதாரண கிராம மக்கள் உபயோகப்படுத் தக்கூடியது. மேலும் பாம்பு பிடிக்கின்றவர்கள் கூட இந்த ஈட்டி மாதிரி ஒரு ஆயுதத்தை தான் வைத்திருக்கிறார்கள். ஆகவே இந்த உரிமம் பெறவேண்டும் என்ற விதி இருப்பதன் காரணத்தால் சிலரை வேண்டும் என்றே சங்கடப்படுத்தக்கூடிய சூழ்நிலை ஏற்படும். மேலும் இந்த ஈட்டி, பாலா போன்ற வற்றை யாரும் நிச்சயமாக தவறாக பயன்படுத்தமாட்டார்கள். மேலும் இது அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது. ஆகவே இதற்கு விதிவிலக்கு அளிக்க அரசு தக்க பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, வீட்டு, விவசாய, விஞ்ஞான மற்றும் தொழில் உப யோகங்களுக்கான சிலபல ஆயுதங்களைப் பயன்படுத்தலாம் என்று சொல்லி இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்று விவசாயத் துறையிலே உள்ளவர்கள் இதைப் பயன்படுத்த வேண்டும் என்றால் அதற்காக உரிமம் பெறுவ திலே எந்த விதமான சங்கடமும் இருக்காது. மேலும் உரிமம் பெற்றவர்களே தவறாகப் பயன்படுத்தி இருந்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால் இது பயன்படும். ஆகவே தேவைப் பட்டால் இந்த உரிமத்தைப் பெற்று பயன்படுத்திக் கொள்ள லாம். ஆனால் அப்படி உரிமம் பெறுவதிலே ஏதாவது சங் கடங்கள் ஏற்படுகின்றன என்று சொன்னால் அந்தச் சங்கடங் கள் ஏற்படாமல் அரசு பார்த்துக் கொள்ளும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

1982 மார்ச் 24]

(முற்பகல் 10–00.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : உத்தரப்பிரதேசத்தில் ஹரிஜனங்களின் பாதுகாப்பிற்காக துப்பாக்கி வழங்குவதுபோல் தமிழ் நாட்டிலும் எல்லா ஹரிஜனங்களுக்கும் துப்பாக்கி வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: உத்தரப் பிரதேசத்தின் நிலை தமிழ்நாட்டில் ஏற்படவில்லை, ஏற்படவும் வேண்டாம், ஏற்படவும் கூடாது.

திரு. இரா தாமரைக்கனி: கிராமங்களில் கத்தி, அரிவாள் ஈட்டி, கோடாரி போன்றவற்றை ஆயுதங்களாக பயன்படுத்துவது போல் சென்னை நகர், மற்ற நகரங்களில் உள்ள கேடிகள் சோடாப்புட்டி, கோலி சோடாபுட்டிகள் பயன்படுத்துகிறார்கள். இந்த கோலிக்குண்டு சோடாப்புட்டி மிகவும் வேகம் உள்ளது. ஆகவே இந்த கோலிக்குண்டு சோடாவிற்கு அதைத் தயாரிப்பதற்கு தமிழ்நாட்டில் அரசு தடை விதிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : ஒருவரை அடிப்பதற்கு கைகள் கூட போதும். அதற்காக இருப்பவர்கள் கைகளை எல்லாம் அகற்றுவது என்பது கடினமான ஒன்று. நல்ல எண்ணத்தோடுதான் உபயோகிப்பவர்கள் என்று விதிமுறைகள் வைக்கிறோம். கூடுமான வரை வன்முறைக்குப் பயன்படுத்துவதற்கு ஏதுவாக இருப்பவைகளை தடை செய்கிறோம். சமாதான காலத்தில் பயன்படுத்தக்கூடிய பலவற்றிற்கு தடை விதிப்பது என்று சொன்னால் அதனால் ஏற்படுகிற சங்கடங்கள் அதிகமாகும். எனவே சோடாபுட்டி, மற்றவைகளுக்குத் தடை விதிப்பதற்கில்லை.

வடாற்காடு மாவட்டத்திலுள்ள முன்னாள் இராணுவத்தினர்

*வினா எண். 627—திரு. இல. பலராமன். மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் உள்ள மொத்த முன்னாள் இராணுவத்தினர் எண்ணிக்கை தாலுகா வாரியாக யாது ?

(ஆ) இவர்களுக்கு தொழில் வேலைவாய்ப்புக்கு வழங்கிய கடன் வசதி எவ்வளவு ?